DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 112/2015

PROSECUTION WITNESS L.W. 9/P.W. 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | நந்தகுமார் | Caste | : | |
| Father's Name | : | பரமசிவம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

1 முதல் 5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1 முதல் 5 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 29.01.2024.

முதல் விசாரணை

1) நான் சின்னயம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு சோலார் பவர் யூனிட்டில் சைட் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறேன்.

2) மணிகண்டன், லெனின், கிருபாகரன், சதீஷ்குமார் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் மணிகண்டன், லெனின் என்னுடைய கல்லூரி வகுப்பு தோழர்கள். மற்றவைர்களை எனக்கு தெரியாது. நான் கல்லூரியில் படித்து கொண்டிருக்கும்போது பேங்க் ஆப் பரோடாவின் மேனேஜர் மற்றும் SI ஆகியோர் வந்து லெனினிடம் நான் கொடுத்த ATM கார்டு பிரச்சனை எனக்கூறினார்கள். கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். வழக்கை குறித்து மற்ற சங்கதிகள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு,

அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட  குறுக்கு விசாரணை:

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சதீஷ்குமார், வினோத்குமார், அலாவூதின், ராம்கி, விஜய் ஆகிய எதிரிகளை தெரியுமா என்றால் தெரியாது. கடந்த 27.03.2012 ம் தேதி நான் உதவித் தொகைக்காக திண்டலில் உள்ள பேங்க் ஆப் பரோடாவில் கணக்கு துவங்கினேனா என்றால் ஆமாம். வங்கிக் கணக்கு எண் 25670100015027 என்றால். அதற்கு ATM கார்டு கொடுத்தார்களா என்றால் ஆமாம். . எனக்கு மணிகண்டன், லெனின், தினேஷ் ஆகியோர்கள் நண்பர்கள் என்றால் தினேசை எனக்கு தெரியாது.  என்னிடம் எனது நண்பர் கிருபாகரன் சதீஷ்குமார் என்பவரை அழைத்து வந்து அறிமுகப்படுத்தினாரா என்றால் யாரென்று தெரியாது. சதீஷ்குமாரின் உறவினர் வெளிநாட்டில் வேலை செய்து வருவதால் பணப் பரிமாற்றத்திற்காக என்னிடம்  ATM கார்டு ஒரு மாதத்திற்கு கொடுக்குமாறு கேட்டாரா என்றால் அவரை எனக்கு தெரியாது. ATM கார்டை கொடுத்த பிறகு சதீஷ்குமாரை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது பதில் ஏதும் இல்லை என்றால் தெரியாது. அதன் பின் நான் விசாரிக்கும்போது சதீஷ்குமார் அவனது நண்பர்களான வினோத்குமார், ராம்கி, அலாவூதின், ஆகியோர்கள் சேர்ந்து கொண்டு பல நபர்களிடம் ATM கார்டு பெற்றுக் கொண்டு நம்பிக்கை மோசடி செய்தார்கள் என்று தெரிந்து கொண்டீர்களா என்றால் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னார்கள். போலீசார்  என்னை விசாரித்தார்களா என்றால். நீங்கள் எல்லா விவரங்களையும் தெரிந்து கொண்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரான போதும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.